# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 190 | செவ்வாய்க்கிழமை Tuesday | 06.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# சென்னையில் 11ந் தேதி பிரதமர் மோடி 'ரோடுஷோ'



பிரதமர் மோடி வருகிற 11-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) சென்னை வருகிறார். சென்னை வரும் அவர் பூந்தமல்லி - வடபழனி இடையேயான 14.64 கிலோ மீட்டர் தூர மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைக்க உள்ளார்.

சென்னை வரும் பிரதமர் மோடிக்கு பா.ஜ.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரதமரின் வருகையையொட்டி கட்சியினர் அதிக அளவில் திரண்டு வரவேற்பு அளிக்க திட்டமிட்டு ள்ளனர்.

மெட்ரோ ரெயில் தொடக்கவிழாவில் முதலமைச்சர் விஜய்யும் கலந்து கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.பிரதமர்மோடியும், முதலமைச்சர் விஜய்யும் ஒரே மேடையில் பங்கேற்க உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

போரூர், நந்தம்பாக்கம் மற்றும்சென்னைஐ.ஐ.டி. உள்ளிட்ட இடங்களில் பிரதமருக்கு வரவேற்பு அளிக்க பா.ஜ.க.வினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு இடத்திலும் தலா 3 மாவட்டங்களைச் சேர்ந்த கட்சியினரை திரட்டிவரவேற்புஅளிக்க திட்டமிடப்பட்டு ள்ளது.

சென்னை மாவட்டம் மற்றும் புறநகர் மாவட்டங்களில் இருந்து ஏராளமான கட்சியினரை திரட்டி,கட்சி கொடிகளுடன் பிரதமரை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ரோடு-ஷோ

போரூர் நிகழ்ச்சியை தொடர்ந்து பிரதமர் மோடி காரில் சென்னை ஐ.ஐ.டி.க்கு செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வழிநெடுகிலும் அவருக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சைதாப்பேட்டை சின்னமலை முதல் கிண்டி வழியாக சென்னை ஐ.ஐ.டி. வரையிலான சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் சாலையின் இருபுறமும் கட்சியினரும் பொதுமக்களும் திரண்டு பிரதமரை வரவேற்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் மாநில நிர்வாகிகள் ஆலோசனைநடத்தினர்.மேலும், பிரதமர்செல்லும்வழித்தடத்தையும் பார்வையிட்டு, எத்தனை பேரை திரட்டி வரவேற்பு அளிப்பது என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார்





மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் அனல் பறந்த இடைத்தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது. நாளை இடைத்தேர்தல் நடக்கிறது.

**7 தொகுதிகள் காலி**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு பின்னர், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை), பி. சத்தியபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), டாக்டர்சி.விஜயகுமார் (விராலிமலை), எம். ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்) ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் ஐக்கியமானார்கள்.

சென்னை பெரம்பூர், திருச்சிகிழக்குஆகிய 2 தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்-அமைச்சர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். எனவே 7 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

**2 தொகுதிகளில் இடைத்தேர்தல்**

இதற்கிடையே திருச்சி கிழக்கு. கரூர், பெருந்துறை, விராலிமலை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளின் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தலை நடத்துவதற்கு தடை உத்தரவு பிறப்பித்தது.இதனால் இந்த 5 தொகுதிகளை தவிர்த்து,மதுராந்தகம் (தனி),தாராபுரம் (தனி) ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டும் நாளை (செவ்வாய்க்கிழமை) இடைத்தேர்தல் நடக்கிறது.

**5 முனைப் போட்டி**

கடந்த சட்டமன்ற தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் அ.தி.மு.க.சார்பில்போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் தற்போது த.வெ.க. வேட்பாளராக களத்தில் உள்ளார். இந்த தொகுதியில் பரந்தாமன் (தி.மு.க.). கணிதா சம்பத் (அ.தி.மு.க.), சுகந்தி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்),ஜானகிராமன் (நாம் தமிழர் கட்சி) உள்பட மொத்தம் 27 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தாராபுரம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடிய சத்தியபாமா த.வெ.க வேட்பாளராக களம் காண்கிறார். இந்த தொகுதியில் சுகன்யா (தி.மு.க.). பானுமதி (அ.தி.மு.க.), லட்சுமணன் (இந்திய கம்யூனிஸ்ட்), கார்த்திகா (நாம் தமிழர் கட்சி) உள்பட 22 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்த 2 தொகுதியிலும் 5 முனை போட்டி நிலவுகிறது.

**விஜய் 'ரோடு ஷோ'**

த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவரும், முதல்-அமைச்சருமான விஜய், 'ரோடு ஷோ' மூலமாகவும், பிரசார கூட்டங்கள் வாயிலாகவும் 'விசில்' சின்னத்துக்கு ஆதரவு திரட்டினார். இதேபோன்று த.வெ.க.வை சேர்ந்த அமைச்சர்கள் தொகுதியில் முகாமிட்டு வாக்குசேகரிப்பில் ஈடுபட்டனர். கூட்டணி கட்சி தலைவர்களும் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொண்டனர்.

தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினும் பொதுக்கூட்டங்கள், 'ரோடு ஷோ' மூலம் 'உதயசூரியன்' சின்னத்துக்கு வாக்குகள் திரட்டினார். எதிர்க்கட்சி தலைவரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் வேன் பிரசாரத்தில் ஈடுபட்டு தொகுதிகளை சுற்றி வலம் வந்தார்.

அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தீவிர வேன் பிரசாரத்தில் ஈடுபட்டார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பொதுக்கூட்டங்கள், வாகனம் மூலம் பிரசாரம் மேற்கொண்டார்.அதேபோன்று தங்கள் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் ஆகியோரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

**பிரசாரம் ஓய்ந்தது**

இந்த 2 தொகுதிகளிலும் அனல் பறந்த இடைத்தேர்தல் பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் ஓய்ந்தது. பிரசாரம்முடிந்தவுடன் இந்த 2 தொகுதிகளும் தேர்தல், போலீஸ் அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக கொண்டு வரப்பட்டது. வெளியூரை சேர்ந்தவர்கள் தொகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மூலம் உத்தரவிடப்பட்டது எனவே பிரசாரம் முடிந்தவுடன் இந்த 2தொகுதிகளில்உள்ள தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்களில் வெளியூரை சேர்ந்தவர்கள் யாரேனும் தங்கி இருக்கிறார்களா? என்று போலீசார் சோதனை மேற்கொண்டனர். இந்த 2 தொகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளுக்கு நேற்று முதல் விடுமுறை விடப்பட்டுள்ளது. வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள், பணப்பட்டுவாடா நடக்கிறதா? என்பதை கண்காணிக்கும்பணியும் தீவிரப்படு த்தப்பட்டுள்ளது. இடைத்தேர்தலையொட்டி மதுராந்தகம் தொகுதியில் 285 வாக்குச்சாவடி மையங்களும், தாராபுரம் தொகுதியில் 320 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் (செவ்வாய்க்கிழமை) காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது. மாலை 6 மணி வரையில் வாக்குப்பதிவு நடக்கிறது. தேர்தலையொட்டி இந்த2தொகுதிகளுக்கும் உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

# வெற்றி பயணம் திட்டத்திற்கு தடை இல்லை

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



சென்னை: தமிழ்நாடு முழுவதும் அரசு பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்யும் "வெற்றி பயணம்" திட்டத்திற்கு தடை விதிக்க முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்ததிமுகஆட்சியில் வேலைக்கு செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள், வயதானவர்கள் உள்ளிட்டோர் பயன் பெறும் வகையில் செயல்படுத்தி வந்த 'விடியல் பயணத் திட்டம்' விரிவுபடுத்தப்பட்டு, 'வெற்றி பயணத் திட்டம்' என்ற பெயரில் அக்டோபர் 2ஆம் தேதி தமிழக முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் துவக்கி வைத்தார்.

த.வெ.க தலைமையில் ஆட்சி அமைந்த பின், தமிழகம் முழுவதும் இயங்கும் 12 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்ய வகை செய்யும், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தை எதிர்த்து ஈரோட்டை சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர் கலாமணி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்.

அந்தமனுவில்,'வெற்றி பயண திட்டம் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் வருவாய் இழப்பை சந்தித்து, தொழிலை கைவிட வேண்டிய சூழல் நிலை உருவாகியுள்ளது.பெண் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்காமல் இருப்பது அரசியல் சட்டத்தின் சம உரிமையை மீறும் செயல்.

வெற்றி பயணத் திட்ட பயனாளிகளுக்கான கட்டணமாக, ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாயை அரசே ஏற்றுக் கொண்ட நிலையில், இதேபோல இழப்பீடு வழங்கி, தனியார் பேருந்துகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூட்டமைப்புவிடுத்தகோரிக்கையை அரசு ஏற்கவில்லை.

சட்டப் பேரவையில் முதல்வரின் அறிவிப்பு அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் தொடர்பாக எந்த அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை என்பதால், இந்த திட்டத்தை அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும்' என கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது.

இந்தவழக்கு,சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பழனி, "எந்த அரசாணையும் இல்லாமல் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், அரசாணை இந்த வழக்கில் முக்கியம் இல்லை என்பதால், அதை எதிர்த்து வழக்கு தொடரவில்லை" என தெரிவித்தார். வழக்கைவிசாரித்த நீதிபதிகள், "வெற்றி பயணத் திட்டத்தை தமிழகம்முழுவதும்செயல்படுத்தத் தடை விதிக்க முடியாது.

ஒரு மாவட்டத்தில் செயல்படும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எந்த அடிப்படையில் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு தடை கோர முடியும்?

அக்டோபர் 2-ம் தேதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அரசாணையை எதிர்த்து மனுதாரர் வழக்கு தொடரலாம். அதிலும், தங்களது மாவட்டத்திற்கு மட்டுமே திட்டத்தை செயல்படுத்த தடை கோர மனுதாரருக்கு உரிமை உள்ளது" என தெரிவித்தனர்.

இதையடுத்து, மனுவை திரும்பப் பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதை ஏற்ற நீதிபதிகள், மனுவை திரும்பப் பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்தனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## திருப்பரங்குன்றத்தில் ஆயிர வைசிய நடு மண்டல சோமிய செட்டியார் மகாஜன சங்க மாநில பொதுக்குழு கூட்டம்

### கண்ணகிக்கு சிலை வைத்து மணிமண்டபம் கட்ட தமிழக அரசுக்கு கோரிக்கை



திருப்பரங்குன்றம் தனியார் மண்ட பத்தில் ஆயிர வைசிய நடு மண்டல சோமிய செட்டியார் மகாஜன சங்க மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது

மதுரை திருப்பரங்குன்றம் கீழ ரத வீதியில் உள்ள தனியார் மண்டபத்தில் ஆயிர வைசிய நடுமண்டல சோழிய செட்டியார் மகாஜன சங்க கூட்டம் நடைபெற்ற து கூட்டத்தில்துணைச்சியாளர் பூர்ண லிங்கம் வரவேற்புரை கூறினார் துணைத் தலைவர்கள் பர்மா முருகன் சுரேஷ்குமார்வரவேற்புரையும்

செயலாளர் திருப்பதி பொருளாளர் பாண்டி

தலைவராக முத்து குமரர் தேர்வு செய்யப்படனர்.பின்னர் நடைபெற்றபொதுக்குழு கூட்டத்தில்

*வைசிய குல பெண் கற்புக்கரசி கண்ணகி கோவலனுடன் மதுரை வந்தபோது பாண்டிய மன்னனால் கோவலன் பொட்டலில் கொல்லப்பட்டதால் அங்கு கண்ணகிக்கு சிலை வைத்து மணிமண்டபம் கட்ட தமிழக அரசுக்கு கோரிக்கை*

தங்களது சமூகத்திற்கு சோழிய செட்டியார் சாத செட்டியார் என சான்றிதழ் வழங்கப்படுவதை மாற்றி நடுமண்டல செட்டியார் என வழங்க கோரியும்

நடுமண்டல செட்டியார் என்றபெயரில் சான்றிதழ் வழங்கும்போது (MBC) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என வழங்க கோரியும்

உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன

மதுரை ஆயிர வைசிய நடுமண்டல சோழிய செட்டி மகாஜன சங்க பொதுக்குழு கூட்டத்தில் தேனி திண்டுக்கல் விருதுநகர் சிவகங்கை ராமநாதபுரம் திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் முதலமைச்சர் காப்பீடு திட்டத்தின் மூலம் 6 பயனாளிகளுக்கு ரூபாய் 7,55,700 மதிப்பீட்டில் செயற்கை அவையங்களை வழங்கினார்.

## எஸ் வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியின் மாணவியின் அபார சாதனை



எஸ் வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டில் பயின்று வரும் மகேஸ்வரி என்ற மாணவி முதலமைச்சருக்கான விளையாட்டு கோப்பை போட்டியில் 2026காணமாவட்ட அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டியில் செப்டம்பர் 18-ஆம் தேதி குண்டு எறிதல் போட்டியில் கலந்து கலந்துகொண்டு தங்க நாணயத்துடன் கூடிய முதல் பரிசை வென்றுள்ளார் இதை அறிந்த எஸ் வீராச்சாமி செட்டியார் கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் வி. முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி மாணவிக்கு வாழ்த்துக்களை தெரிவித்து சிறப்பு பரிசுகளையும் வழங்கி பாராட்டினர். இதற்கு ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள் துறைத் தலைவர்கள் மற்றும் முதல்வர் இசக்கிமுத்து மாணவிக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மென்மேலும் பல போட்டிகளில்கலந்துகொண்டு பல பரிசுகளை வெல்வதற்கு வாழ்த்துக்களை கூறினார்.

## தேனியில் உலக அமைதி தினத்தை முன்னிட்டு

## ஆதரவற்றோர் காப்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் 60 நிமிடத்தில் 600க்கும் மேற்பட்ட யோகா ஆசனங்களை செய்து உலக சாதனை படைத்தனர்



தேனி மாவட்டம் கோடாங்கிபட்டியில் உள்ள மனிதநேய ஆதரவற்றோர் குழந்தைகளுக்கான காப்பகத்தில் உலக அமைதி தினத்தை முன்னிட்டு யோகாசனத்தில் உலக சாதனை செய்யும் நிகழ்வு நடைபெற்றது

50 ஆதரவற்றோர் மாணவ மாணவிகள் இந்த யோகாசன சாதனை படைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு 60 நிமிடத்தில் 600-க்கும் மேற்பட்ட யோகா ஆசனங்களை செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்

மாலை 5 மணி தொடங்கி ஆறு மணி வரை 60 நிமிடங்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில் 600-க்கும் மேற்பட்ட யோகா ஆசனங்களை செய்து மாணவர்கள் அசத்தினர்

இந்த உலக சாதனை முயற்சியை ஆல் இந்தியன் புக்ஸ் ஆப் ரெக்கார்ட்ஸ் மற்றும் ஹை ரேஞ்ச் புக்ஸ் ஆப் ரெக்கார்ட்ஸ் ஆகிய அமைப்புகள் உலகசாதனையாக அங்கீகரிக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

## நாய்க்கடியால் பாதித்த ஆதரவற்றவருக்கு சிகிச்சைக்கு உதவிய மருந்தாளுநர்



ஆண்டிபட்டி அருகே சக்கம்பட்டி வடக்குத் தெருவை சேர்ந்தவர் நாகராஜ் 26,

ஆதரவற்ற இவர் ஆங்காங்கே கிடைக்கும் சிறு வேலைகளை செய்து பிழைப்பு நடத்தி வருகிறார். ஒரு வாரத்திற்கு முன்பு அழுக்குத் துணியுடன் சுற்றித்திரிந்ததால் அவரைதெருநாய்கடித்து விட்டது. வழிமுறை தெரியாமல் மருத்துவ சிகிச்சை பெறவில்லை. காலில் நாய் கடித்த இடத்தில் புண் ஏற்பட்டு இரத்தம் வடிந்த நிலையில் கால் வீங்கி நடக்க முடியாமல் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் விதமாக தெருக்களில் சுற்றித் திரிந்தார். இது குறித்து தகவல் அறிந்த ம.சுப்புலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருந்தாளுநரும் சமூக ஆர்வலருமான ரஞ்சித்குமார், நாய்க்கடியால் பாதித்தவரை மீட்டு மாற்று உடை அணிவித்து பொதுமக்கள் உதவியுடன் 108 அவசர ஊர்தி மூலம் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு அவருக்கு முறையான தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பல இடங்களில் தெருநாய்கள் அதிகம் சுற்றித் திரிவது முதியோர்களுக்கும்,குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தி உள்ளது. தெரு நாய்களை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

## தூத்துக்குடியில் பிரதமர் மோடி பிறந்தநாளை முன்னிட்டு

## பாஜக சார்பில் கண், புற்றுநோய், ரத்தப் பரிசோதனைகளுடன் ரத்ததான இலவச மருத்துவ முகாம்



பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் பாஜக சார்பில் தொடர்ந்து 30 நாட்கள் பல்வேறு சேவை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக மருத்துவப் பிரிவு சார்பில் இலவச மருத்துவ முகாம் மற்றும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

தூத்துக்குடி வடக்கு ரத வீதியில் உள்ள டி.ஏ. திருமண மண்டபத்தில் அக்டோபர் 3-ஆம் தேதி நடைபெற்ற இம்முகாமிற்கு, மாவட்ட மருத்துவப் பிரிவு தலைவர் டாக்டர் கே. ரவீந்திர பாலாஜி தலைமை வகித்தார். மருத்துவப் பிரிவு மாநிலச் செயலாளர்கள் டாக்டர் ருக்மணி, டாக்டர் அரவிந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு கண் பரிசோதனை, புற்றுநோய் பரிசோதனை, ரத்தப் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதனுடன் ரத்ததான முகாமும் நடைபெற்றது.

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்று வரும் சேவை நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக, பொதுமக்களின் உடல்நலனை கருத்தில் கொண்டு இம்மருத்துவ முகாம் நடத்தப்பட்டதாக பாஜக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.எம். ராஜேஷ், மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், மாவட்ட செயலாளர் செல்வி, மாவட்ட துணைத் தலைவர்கள் சண்முகசுந்தரம், சிவராமன், இசக்கிமுத்து உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், பல்வேறு அணிகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள்,நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## விருத்தாச்சலம் பெரிய கோவிலில் 14 மாதங்களாக தொடரும் அன்னதான சேவை



கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி உடனுறை பழமலைநாதர் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் பசியைப் போக்கும் வகையில், சமூக ஆர்வலர் எ. கொளப்பாக்கம் இளையராஜா சார்பில் கடந்த 14 மாதங்களாக தொடர்ந்து அன்னதான சேவை நடைபெற்று வருகிறது. ஓம்சக்தி குரூப்ஸ்&ரியல் எஸ்டேட், எர்த் மூவர்ஸ் மற்றும் விவசாயிகளின் தோழனான நவீன நெல் அறுவடை இயந்திர சேவை ஆகிய தொழில் நிறுவனங்களின் சார்பில், ஒவ்வொரு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் மூலம் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை சமூக நலன் மற்றும் ஆன்மிகப் பணிகளுக்கு செலவிட்டு வரும் இளையராஜா, ஓராண்டைக் கடந்தும் இச்சேவையை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக, அக்டோபர் 3-ஆம் தேதி நடைபெற்ற அன்னதான நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. கோவிலுக்கு வரும் பக்தர்களின் பசியை போக்கும் நோக்கில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த அன்னதானப் பணிக்கு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## கோவையில் இந்திய வின்வெளி ஆராய்ச்சி மையம் சார்பில் நடைபெறும்

# வின்வெளி கண்காட்சியை கோவை கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர், இஸ்ரோ திருவனந்தபுரம் முன்னாள் இயக்குனர் ஹூட்டன் ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கிவைத்தார்



கோவை குனியமுத்தூர்பகுதியில்உள்ள ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றுவரும் இந்த மாபெறும் கண்காட்சியில் இஸ்ரோதிருவனந்தபுரம் எல்.பி.எஸ்.இ முன்னாள் இயக்குனர் ஆர்.ஹூட்டன்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த கண்காட்சியில்

PSLV C35, ராக்கெட், GSLV F05,ராக்கெட்,

GSLV MK III ராக்கெட்டுகளின் மாதிரி வடிவங்களும், மேலும் ராக்கெட்டுகளின் இஞ்சின்களும், ராக்கெட்டின் உதிரி பாகங்களும் கண்காட்சியில் இடம்பெற்றதுடன் கண்காட்சியை பார்க்க வந்த அரசு, மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு ராக்கெட்டுகளின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்கள். கண்காட்சியை பார்வையிட்ட அரசு பள்ளி மாணவர்கள் இதுபோன்ற கண்காட்சிகள் எங்ககுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், இதுவரை பார்க்காததை நேரில் பார்க்க முடிந்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், புதுவித அனுபவத்தை அளித்துள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் வின்வெளி வீரர்களின் உடைகளின் மாதிரிகளை மாணவர்கள் ஆர்வமுடன் கண்டு களித்தனர். வின்வெளி குறித்து படித்து வரும் மாணவர்களுக்கு வின்வெளிகுறித்தும், ராக்கெட்டுகளின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய ஹூட்டன் கூறியதாவது.. அறிவியலதுறையில் இந்தியாஅடைந்துவரும் இந்தப் பாய்ச்சல், உலக அரங்கில்நாட்டின்பெருமையை மேலும் உயர்த்தும்,எதிர்காலத்திட்டங்கள், மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டம், பாரதிய அந்தரிக்ஷ ஸ்டேஷன் மற்றும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்தும் தெரிவித்தார். மேலும் கோவை, நீலகிரி, திருப்பூர் உள்ளிட்ட சுற்றியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 12,000 மாணவர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும், தெரிவித்தார் மேலும் விண்வெளித் துறையில் இந்தியாவின் முக்கிய இலக்குகள் குறித்துப்பல முக்கியத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்திற்கான 95% சோதனைப் பணிகள் நிறைவடைந்துவிட்டன. மனிதர்களை அனுப்பும் முன், பாதுகாப்பு காரணங்களுக்காக 3 ஆளில்லா விண்கலங்கள் விண்ணில் ஏவப்படும். இதில் முதல் ஆளில்லா விண்கலம் இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏவப்பட வாய்ப்புள்ளது என்றார்.

## கோவையில் மின்னணுக் கழிவுகள் சேகரிப்பு முகாம்

# மின்னணுக் கழிவுகளால் சுற்றுச்சூழல், மனித ஆரோக்கியம் பாதிப்பு – விழிப்புணர்வு அவசியம்: வீ த லீடர்ஸ் அமைப்பு வலியுறுத்தல்

கோயம்புத்தூர் ரேஸ் கோர்ஸ் சாலையில், "வி த லீடர்ஸ்", "க்ரீன் இரா ரீசைக்கிள்" மற்றும் "டு அறம்" அமைப்புகள் இணைந்து மின்னணுக் கழிவுகள் சேகரிப்பு முகாமை நடத்தின.

வி த லீடர்ஸ் அமைப்பின் சார்மாக, டாக்டர் அனுஷா ரவி தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், பொதுமக்களிடம் இருந்து வீடுகளில் பயன்படுத்தப்பட்டு கழிவாகும் மொபைல் போன்கள், சார்ஜர்கள், பேட்டரிகள், கணினி உதிரிபாகங்கள், லேப்டாப்கள் உள்ளிட்ட பல்வேறு மின்னணுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. மின்னணுப் பொருட்கள் பயன்பாட்டுக்குப் பிறகு முறையாக சேகரிக்கப்படாமல் திறந்தவெளியில்வீசப்படுவதால், அவற்றில் உள்ள ரசாயனங்கள் மற்றும் நச்சுப் பொருட்கள் மண் மற்றும் நிலத்தடி நீரில் கலந்து, உணவுச் சங்கிலி மூலம் மனிதர்களை பாதிக்கும் அபாயம் உள்ளதாக



அமைப்பினர் தெரிவித்தனர்.

இதனால்சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன், மனிதர்களின் உடல்நலத்திற்கும் பாதிப்பு ஏற்படும்என்பதால்,மின்னணுக் கழிவுகளை முறையாக சேகரித்து மறுசுழற்சி செய்வது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், எதிர்காலத்தில் மின்னணுக் கழிவுகளின் அளவு கணிசமாக அதிகரிக்கும் நிலையில், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக மின்னணுக் கழிவுகளை தனியாக சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அனுஷா ரவி கேட்டுக்கொண்டார்.

மின்னணுக் கழிவுகளை முறையாக சேகரித்து மறுசுழற்சிக்காக அனுப்புவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்க முடியும் என்றும், மின்னணுக் கழிவுகள் இல்லாத தூய்மையான தமிழகத்தை உருவாக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், அக்டோபர் 14-ஆம் தேதி நடைபெறும் சர்வதேச மின்னணுக் கழிவு நாளை முன்னிட்டு, கோயம்புத்தூரில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் இருந்து அக்டோபர் 4 முதல் 14-ஆம் தேதி வரை மின்னணுக் கழிவுகள் சேகரிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தனர்.

## தமிழ்நாடு அரசின் சோலார் மின் மானியத் திட்டத்திற்கு தமிழக முதல்வருக்கு, கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள

# பத்திரிகையாளர் மன்றத்தின் வாயிலாக, நன்றிகளை கூறிய தமிழ்நாடு சோலார் பிசினஸ் அசோசியேஷன் அமைப்பினர்




கோவை உப்பிலிபாளையம்பகுதியில்உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசிய, தமிழ்நாடு சோலார் பிசினஸ் அசோசியேஷன் சங்கத்தினர் கூறியதாவது..

மத்திய அரசின் 78ஆயிரம் ரூபாய், சூரிய மின் மானியத்துடன், தமிழக அரசின் கூடுதல் 22ஆயிரம் மானியத்தையும் இணைத்து, தகுதியுள்ள வீட்டு மின் நுகர்வோருக்கு மொத்தமாக 1 லட்சம் வரை மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு சோலார் பிசினஸ் அசோசியேஷன் சார்பில் மனமார வரவேற்பதாகவும், பொதுமக்கள் அதிக அளவில் மேற்கூரை சூரிய மின் நிலையங்களைஅமைக்கவும், சூரிய மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கவும், பசுமை எரிசக்திவளர்ச்சியைமேம்படுத்தவும்இந்தத்திட்டம் பெரிதும் உதவும் என தெரிவித்தனர். இத்தகைய பயனுள்ள திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கும், தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. நிர்மல்குமாருக்கும் தமிழ்நாடு சோலார் பிசினஸ் அசோசியேஷன் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்தனர்

மேலும் இது குறித்து பேசிய தமிழ்நாடு சோலார் பிசினஸ் அசோசியேஷன் தலைவர் ஈரோடு கந்தசாமி தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் சங்கத்தின் துணைத் தலைவர் பிரபாகர், சங்கத்தின் செயலாளர் செல்வகுமார்,சங்கத்தின்இணைச் செயலாளர்கள் சுஜய் கங்காதரன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னணி கருத்தரிப்பு சிகிச்சை மையமான, ஏ போர் பெர்டிலிட்டி சென்டர் தனது, 25வது கிளையை கோவை ஹோப்ஸ் பகுதியில் திறந்துள்ளது

## பிரபல திரைப்பட நடிகை ராதிகா சரத்குமார் மற்றும் சின்னத்திரை புகழ் கோபிநாத் ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர்

முன்னணி கருத்தரிப்பு சிகிச்சை மையமான ஏ,போர் பெர்டிலிட்டி சென்டர் தனது 25வது புதிய கிளையை கோவை ஹோப்ஸ் பகுதியில் திறந்துள்ளது. கருத்தரிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும்தனி பயனாக்கப்பட்ட சிகிச்சை முறைகளின் உதவிகளுடன் விரிவான கருத்தரிப்பு சிகிச்சையை வழங்கும் நோக்கமாகக் கொண்டுள்ள இந்த மையத்தை திரைப்பட நடிகையும், தயாரிப்பாளருமான ராதிகா சரத்குமார், மற்றும் பிரபல சின்னத்திரை தொகுப்பாளரும், பேச்சாளருமான கோபிநாத் ஆகியோர் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஏ 4 பெர்டிலிட்டி சென்டர் நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான டாக்டர் அசோக் குமார், மற்றும் ஏ4 பெர்டிலிட்டி சென்டர்குளோபல்கிளினிக் இயக்குனரும் இணைநிர்வாகஇயக்குனருமான டாக்டர் அருணா அசோக் ஆகியோர் இணைந்து கூறியதாவது..




கோவையில் திறக்கப்பட்டுள்ள இந்த ஏ 4,ஃபெர்டிலிட்டி சென்டர், ஒரே கூரையின் கீழ் அனைத்து வகையான கருத்தரிப்பு சிகிச்சைகளையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐவிஎப் மற்றும் ஐயூஐ, மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான குழந்தை பேறு சிகிச்சை, கருமுட்டை, விந்தணு மற்றும் கரு உறைவிப்பு, கருத்தரிப்புத்திறன் பாதுகாப்பு,மற்றும் மரபணு சோதனை, லேப்ராஸ்கோப்பி, மற்றும் நன்கொடையாளர், மற்றும் கரு நன்கொடை திட்டங்கள், பாலிகுலர் கண்காணிப்பு, ஓவுலேஷன் இன்டக்ஷன் உள்ளிட்ட நவீன சிறப்பு சேவைகளை இந்த மையம் வழங்குகின்றதாக தெரிவித்தனர். மேலும் எளிதில் அணுக கூடிய மற்றும் சிறப்பான கருத்திருப்பு சிகிச்சையின் தேவை அறிந்து வரும் நிலையில்,இந்த மையம் அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் மற்றும் மேம்பட்ட ஐவிஃப் நவீன கருத்தரிப்பு தொழில்நுட்பங்களை, வழங்குகின்றது எனவும், நோயாளிகளின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள,தனி பயனாக்கப்பட்ட சிகிச்சை திட்டங்களிலும் இந்த மையம் கவனம் செலுத்துவதாகஅவர் தெரிவித்தார். மிக சிறப்பான சிகிச்சையினை அழிப்பதற்காக நிபுணத்துவம் வாய்ந்த ஐவிஎப் ஆலோசகர்களுடன், இணைந்து ஏ4 ஃபெர்டிலிட்டி சென்டர் செயல்படுகின்றது எனவும் கோவையை தொடர்ந்து விரைவில், பொள்ளாச்சி மற்றும் சேலத்தில் புதிய கிளைகளை தொடங்கஏ4பெட்டிலிட்டி சென்டர் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஈரோட்டில் ஏபிபி அழகுக் கலை நிபுணர் சங்க கௌரவத் தலைவர் மறைவுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் அஞ்சலி

ஈரோடு மாவட்ட ஏபிபி அழகுக் கலை நிபுணர் சங்க கௌரவத் தலைவர் பூர்ணிமா டண்ணா மறைவையொட்டி, சத்



திரோடு வசந்தம் ஹாலில் சங்கத் தலைவர் மகேஸ்வரி தலைமையில் உருக்கமான அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 45 ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரபல அழகுக் கலை நிபுணர் ஆசிரியராகவும், லயன்ஸ் கிளப்பில் முக்கியப் பொறுப்பு வகித்து தேசிய அளவில் அறியப்பட்டவருமான இவர் ஆயிரத்திற்கும்மேற்பட்ட மாணவிகளைத் தலைசிறந்த அழகுக்கலை நிபுணர்களாக உருவாக்கியுள்ளார். அவரது அளப்பரிய தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் போற்றும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஐம்பதுக்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்கள் கலந்துகொண்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி, மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் மல்க மௌன அஞ்சலி செலுத்தினர். அப்போது பேசிய நிபுணர்கள், தங்களின் தொழில் மற்றும் வாழ்வியல் பிரச்சனைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த அவரது மறைவு பேரிழப்பு என்றும், இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக அனுபவமிக்க பிரபலஅழகுகலைநிபுணர்கள் ரேணு காதேவி,உமா, ஷகீலா, சாந்தி, சுசீலா, சுதா தாஸ் ஆகியோர் பங்கேற்றனர்; நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் ஈரோடு மாவட்ட ஏபிபி அழகுக்கலை சங்கத்தின் தலைவர்மகேஸ்வரி,செயலாளர் ஜோதிலட்சுமி, பொருளாளர் தீபிகா ஆகியோர் ஒருங்கிணைத்துச் செய்திருந்தனர்.இதனைத்தொடர்ந்து ஈரோடு மாவட்ட ஏபிபி அழகு கலை சங்கத்தின் சார்பாக பயிற்சி வகுப்புகள்நடைபெற்றது.பயிற்சி வகுப்புகளில்பங்குபெற்ற அழகு கலை நிபுணர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. மேலும் இந்த நிகழ்வில் அழகு கலைக்கு தேவையான ஆபரணங்கள்,மற்றும் ஆடைகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

# அச்சன்புதூரில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி TMMK Brothers 11s அணி சாம்பியன்

தென்காசி மாவட்டம் அச்சன்புதூரில் TMMK SPORTS ACADEMY சார்பில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

தமுமுக கிளைத் தலைவர் அகமது அலி ரஜாய் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப்போட்டியில் TMMK Brothers 11s அணியும், Vavai 11s அணியும் மோதின. இதில் 19 ரன்கள் வித்தியாசத்தில் TMMK Brothers 11s அணி வெற்றி பெற்று முதல் இடத்தைப் பிடித்தது.



முதல் இடம் பெற்ற அணிக்கு கோப்பையுடன் ரூ.1,500 பரிசுத்தொகையும், இரண்டாம் இடம் பெற்ற Vavai 11s அணிக்கு கோப்பையுடன் ரூ.1,000 பரிசுத்தொகையும், மூன்றாம் இடம் பெற்ற அணிக்கு ரூ.500 பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட அனைத்து அணி வீரர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

எவரெஸ்ட் கல்விக் குழுமத்தின் PRO மற்றும் Golden கிரிக்கெட் கிளப்பின் முன்னாள் வீரர் எம். திவான்ஒலி கலந்து கொண்டு வீரர்களுக்கு ஆலோசனைகளையும், ஊக்கத்தையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட மமகசெயலாளர் சலீம், தமுமுக மாவட்ட செயலாளர் அப்துல் ரகுமான், மாவட்ட பொருளாளர் ஆரிப், தலைமை செயற்குழு உறுப்பினர் பீர்மைதீன், முன்னாள் பொருளாளர்அபாத்டிராவல்ஸ் பாசித், மாவட்ட துணை செயலாளர் பாருக், விசுவை அப்துல்காதர், கடையநல்லூர் சேகனா உள்ளிட்டோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.

தமுமுக செயலாளர் முகைதீன்அப்துல்காதிர், மமக செயலாளர் ஜெய்னுலாப்தீன், துணைத் தலைவர் அப்துல்ரஹிம், துணை செயலாளர்கள் அமானுல்லாகான், அமீன் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

TMMK SPORTS ACADEMY பொறுப்பாளர் அகமது பைசல் அணிகள் மற்றும் போட்டி ஒருங்கிணைப்பு பணிகளை சிறப்பாக மேற்கொண்டார்.

# 200 ஆண்டுகள் பழமையான சுடலை ஆண்டவர் கோவிலுக்கு மேற்கூரை அமைக்க எதிர்ப்பு?

## மாநகராட்சி உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் அகரம் பொதுமக்கள் மனு



தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு அருகேயுள்ள அகரம் கிராமத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமையான அருள்மிகு சுடலை ஆண்டவர் கோவில் வழிபாட்டுத் தலத்திற்கு பாதுகாப்பு மேற்கூரை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகக் கூறி, தூத்துக்குடி மாநகராட்சி உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி அகரம் கிராம பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அகரம் கிராமத்தைச் சேர்ந்த பூ. சந்தன ராஜா என்பவர்சார்பில்அளிக்கப்பட்டுள்ள மனுவில், தங்களது பாரம்பரிய வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும், கோவில் பகுதியில் பக்தர்களுக்கும் வழிபாட்டுப் பொருட்களுக்கும் பாதுகாப்பு ஏற்படுத்தும் வகையில் மேற்கூரை அமைக்க அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

அகரம் கிராமத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையை ஒட்டி அருள்மிகு சுடலை ஆண்டவர் கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் 200 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி மக்களால் குலதெய்வ மாகவும், காவல் தெய்வமாகவும் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. தலைமுறை தலைமுறையாக நடைபெற்று வரும் இந்த வழிபாட்டில் கிராம மக்கள் மட்டுமின்றி சுற்றுவட்டாரப் பகுதிகளைச்சேர்ந்தபக்தர்களும் பங்கேற்று வருகின்றனர்.

கோவிலில் வைக்கப்பட்டுள்ள சுவாமி படங்கள், பூஜைப் பொருட்கள் மற்றும் வழிபாட்டிற்கு வரும் பக்தர்களை வெயில்,மழை உள்ளிட்ட இயற்கை பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் வகையில் எளிமையான இரும்புத் தூண்கள் அமைத்து தகரக் கூரை அமைக்க பொதுமக்கள் முயற்சி மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தூத்துக்குடி மாநகராட்சி குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் மேற்கூரை அமைக்கும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து பணிகளைத் தடுத்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி உதவிப்பொறியாளர்(AE) லெனின் என்பவர், கோவில் தொடர்பாக "நான் நினைத்தால் கோவிலை அகற்றுவேன்" என்று கூறியதாகவும், அவரது பேச்சு பக்தர்களின் மத உணர்வுகளையும் வழிபாட்டு உரிமையையும் புண்படுத்தும் வகையில் இருந்ததாகவும் கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக உரிய விசாரணை நடத்தி உண்மை நிலையை கண்டறிய வேண்டும் என்றும் மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அகரம் கிராம மக்கள், தூத்துக்குடி நகருக்கான குடிநீர் திட்டங்களுக்கு நீண்ட காலமாகத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1932-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட தூத்துக்குடி நகருக்கான குடிநீர்த் திட்டங்களுக்கும், பின்னர் செயல்படுத்தப்பட்ட 3-வது குடிநீர்த் திட்டத்தின் நீரேற்று நிலையத்திற்கும் அகரம் பகுதி மக்கள் தங்களால் இயன்ற முழு ஒத்துழைப்பையும் வழங்கி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

குடிநீர் திட்டங்களின் முக்கியத்துவத்தை பொதுமக்கள் புரிந்து கொண்டு தொடர்ந்து ஒத்துழைத்து வரும் நிலையில், குடிநீர்த் திட்டத்தை காரணம் காட்டி தலைமுறை தலைமுறையாக நடைபெற்று வரும் வழிபாட்டு உரிமைக்கு இடையூறு ஏற்படுத்துவது நியாயமல்ல என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் உடனடியாகத் தலையிட்டு, வருவாய்த்துறை அதிகாரிகள், மாநகராட்சி குடிநீர் திட்டப் பிரிவு அதிகாரிகள் மற்றும் அகரம் கிராம பிரதிநிதிகளுடன் சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் ஆய்வு செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடிநீர் விநியோகத் திட்டத்திற்கும், பொதுமக்களின் பாரம்பரிய வழிபாட்டிற்கும் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் தொழில்நுட்ப ரீதியாக மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு, சுடலை ஆண்டவர் கோவில் பகுதியில் பாதுகாப்பான மேற்கூரை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பக்தர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் பேசியதாகக் கூறப்படும் மாநகராட்சி உதவிப் பொறியாளர் லெனின் மீது உரிய துறைரீதியான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

விசாரணை நடைபெறும் காலத்திலும் அகரம் கிராம மக்களின் அமைதியான வழிபாட்டிற்கு எவ்வித தடையும் ஏற்படுத்தக் கூடாது என்றும், நீண்டகாலமாக நடைமுறையில் உள்ள வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

200 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி மக்களின் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றுள்ள சுடலை ஆண்டவர் கோவில் தொடர்பான இந்த விவகாரத்தில், மாவட்ட நிர்வாகம் நேரில் ஆய்வு செய்து, குடிநீர் திட்டத்திற்கும் வழிபாட்டுத் தலத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுமுகமான தீர்வு காண வேண்டும் என்பதே அகரம் கிராம மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (05.10.2026) கேட்டறிந்தார்.

# 'Release CCTV footage of Saket police station': Rahul Gandhi targets Centre over women journalists' assault allegations



*Rahul Gandhi on Monday accused Delhi Police of failing to protect women and demanded the release of the full CCTV footage from Saket police station after two women journalists alleged assault and mistreatment there last month.*

*Journalists Shaheen Khan and Nafisa Khan of 4PM News Network alleged that they were detained and assaulted at Saket police station on September 3 while reporting outside a hospital during an event attended by Union home minister Amit Shah and Delhi chief minister Rekha Gupta. They alleged that Shaheen attempted to question the chief minister about an alleged "cycle scam". Delhi Police has denied the allegations.*

*"What's happening in Delhi right now follows a single pattern: silence any woman who dares to ask questions," he said.*

*His remarks came amid separate allegations by three women journalists of sexual harassment and manhandling by police personnel while covering protests against chief election commissioner Gyanesh Kumar near Jantar Mantar on October 3.*

*Gandhi alleged that hundreds of people were detained during the protests and that women protesters had complained of misbehaviour by male police personnel. He also alleged that cameras were snatched from women journalists and said, "Not even an FIR was filed on a journalist's complaint."*

*"A few weeks ago, Shaheen and Nafisa recounted their experiences of violence and mistreatment inside the Saket police station. Think about it–inside the station, the very place where women go to file complaints. Those entrusted with the responsibility of protecting women are now the ones posing a threat to them. And everyone in this country knows who the Delhi Police answers to," Rahul Gandhi said, referring to Amit Shah. "Mr. Amit Shah–why are you and your police so afraid of women?"*

*In a video shared by Gandhi, Shaheen and Nafisa described their alleged treatment at Saket police station.*

# ஈரோடு விஜயமங்கலம் மனவளக்கலை மன்றத்தில் முப்பெரும் விழா கோலாகலம்





ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் மனவளக்கலை மன்ற தவமையம் சார்பில், ஸ்ரீ விஜயபுரி அம்மன் கோவில் மண்டபத்தில் அறங்காவலர் தின விழா, ஞான ஆசிரியர் தின விழா மற்றும் வேதாத்திரி மகரிஷியின் துணைவியார் லோகாம்பாள் பிறந்தநாளான மனைவி நல வேட்பு நாள் விழா ஆகிய முப்பெரும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இறை வணக்கம் மற்றும் குரு வணக்கத்துடன் தொடங்கிய விழாவில் துணைப் பேராசிரியர்கள் எஸ். தனலட்சுமி - பிரகாஷ் தம்பதியினர், பி.சங்கீதா - சென்னியப்பன் தம்பதியினர் மற்றும் எஸ்.கௌசல்யா - பிரேம்குமார் தம்பதியினர் தவம் இயற்றினர். துணைப் பேராசிரியர் கே.சத்தியவேணி - யோகநாதன் தம்பதியினர் வரவேற்புரையாற்ற, மன்றதலைவர் எஸ்.எஸ். சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். ஊத்துக்குளி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக சக்கரவர்த்தி பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரியல் குரூப் ஆப் கம்பெனீஸ் பி. அருள்செல்வம் - மஞ்சுளா தம்பதியினர் மற்றும் சக்தி ஆட்டோ காம்பொனன்ட் ஜி.திருநாவுக்கரசு - புனிதா தம்பதியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் பரதநாட்டியம் மற்றும் யோகாசன செய்முறை விளக்கங்கள் இடம்பெற்றன.

திருப்பூர் உலக சமுதாய சேவாசங்க பேராசிரியர் ரவிக்குமார் - பங்கஜம் தம்பதியினர் சிறப்புரையாற்றி உயிர்கலப்பு தவத்தை வழிநடத்தினர். தவமைய ஆசிரியர்கள் தொகுப்புரை வழங்க, நிறைவாக விஜயமங்கலம் தவமைய பொறுப்பாசிரியர் என். சத்தியபாமா நந்தகுமார் நன்றி கூறினார். இதில் அறங்காவலர்கள், ஆசிரியர்கள்,அருள்தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# இரண்டாம் பருவம் தொடக்கம்: மாணவர்களுக்கு விலையில்லா புத்தகங்கள், நோட்டுகள் வழங்கல்



தேவகோட்டை: முதல் பருவ விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்ட நிலையில், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் பருவத்திற்கான தமிழக அரசின் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்கள் ஸ்ரீதர், சிவரஞ்சனி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். விடுமுறைக்குப் பிறகு உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்த மாணவர்கள் புத்தகங்கள் மற்றும் நோட்டுகளை ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டனர். ஏராளமான பெற்றோர்களும்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செப்டம்பர் 2026ஆம் மாதத்திற்கான மாதம் ஒரு மாமனிதர் சான்றிதழை சிறப்பாக பணியாற்றிய கூட்டுறவு சார்பதிவாளர் செல்வி மு.ஹஸீனாபானு அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, நேற்று (5.10.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூகநீதி பள்ளி விடுதிகளில் சிறப்பு காலமுறை ஊதிய தூய்மைப்பணியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு பணியிடத்திற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, நேற்று (5.10.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# இந்தியாவிடம் 190 அணுகுண்டு: ஆய்வறிக்கையில் தகவல்



புதுடெல்லி: 'புல்லடின் ஆஃப் தி அடாமிக் சயின்டிஸ்ட்ஸ்' சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: நீண்ட தூர ஏவுகணைகளுடன் இந்தியாவின் தற்காப்பு திறன் மேம்பட்டுள்ளது. இந்தியாவிடம் சுமார் 190 அணு குண்டுகள் இருக்கக் கூடும் என தெரிய வந்துள்ளது.

இருப்பினும், அணு ஆயுதங்கள் இருப்பது மட்டுமே போது மானதல்ல; எதிரியின் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை அமைப்புகளும் அவசியமாகும். அந்த வகையில், இந்தியா சக்திவாய்ந்த அணு குண்டுகள் மற்றும் ஹைட்ரஜன் குண்டுகளைக் கொண்டிருப்பதுடன், எதிரி நாட்டுக்குப் பதிலடி கொடுக்கும் நீண்டதூர ஏவு கணை அமைப்புகளையும் கொண்டுள்ளது.

இந்தியா, முதலில் அணு ஆயுதத்தைப்பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கையைத் தொடர்ந்துபின்பற்றிவருகிறது. அதே வேளையில், அணு ஆயுதங்களை செலுத்தும் அமைப்புகளைத்தொடர்ந்து நவீனப்படுத்தி வருகிறது. தரை, வான், கடல் வழியே தாக்கும் முழுமையான 'நியூக்ளியர் ட்ரையாட்' கட்டமைப்பை இயக்கி வருகிறது. அணு ஆயுதங்களில் ரகசியம் காக்கும் இந்தியா தன்னுடைய உத்திசார் ஆயுதங்களின் முழுமையான திறன், விரிவாக்க முறைகள், அவற்றின் உண்மையான தாக்குதல் எல்லை ஆகியவற்றை ஒருபோதும் பகிரங்கமாக வெளியிடுவதில்லை. எனவே, பொதுவெளியில் அறியப்படும் தரவுகள் முழுமையான திறனைக் குறிப்பவை அல்ல. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.